## அரசு ஊழியர்களின் நலன் காக்கும் 'திராவிட மாடல்' அரசு என்பதை நிரூபித்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - பல்வேறு அரசு சங்கங்கள் நன்றி!

## இனிப்பு வழங்கி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்!

**சென்னை, ஜன. 4 -**

**"தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் (Tamil Nadu Assured Pension Scheme - TAPS)" செயல்படுத்திட ஆணையிட்ட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்க நிர்வாகிகள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (3.1.2026) தலைமைச் செயலகத்தில், ஜாக்டோஜியோ, தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் உள்ளிட்ட பல்வேறு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருபதாண்டுகாலக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய புதிய திட்டமான "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் (Tamil Nadu Assured Pension Scheme TAPS)" செயல்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டு, இனிப்புகளை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் எ.வ. வேலு, நிதி, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருபதாண்டுகாலக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய புதிய திட்டமான "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் (Tamil Nadu Assured Pension Scheme - TAPS)" செயல்படுத்திட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.1.2026) ஆணையிட்டார்.

ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கையினை நிறைவேற்றியமைக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று தலைமைச் செயலகத்தில், ஜாக்டோஜியோ, தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம், தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் (தியோடர்), தமிழக தமிழாசிரியர் கழகம், தமிழ்நாடு பட்டதாரி முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம்,

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, டாக்டர் ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் கழகம், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் கூட்டமைப்பு, நர்சுகள் பொதுநல சங்கம், தமிழ்நாடு அளவிலான பள்ளி ஆய்வக உதவியாளர் சங்கம், தமிழ்நாடு வேளாண்மை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம்,

தமிழ்நாடு பல்கலைக்கழக கல்லூரி எஸ்.சி./எஸ்.டி ஆசிரியர் சங்கம், தமிழக ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை ஆசிரியர் காப்பாளர் நலச்சங்கம், தமிழக இடைநிலை மற்றும் பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் மன்றம் (தீபம்), தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி, தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சங்கம்,

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு கல்வித்துறை தட்டச்சர்கள் சங்கம், தமிழக பட்டதாரி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு பதவி உயர்வு பெற்ற முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு அரசுப் பள்ளி ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அளவிலான பள்ளி ஆய்வக உதவியாளர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்க நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இனிப்புகளை வழங்கி தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித்துறை துணைச் செயலாளர் (வரவு செலவு) பிரத்திக் தாயள், குழு உறுப்பினர் டாக்டர் கே.ஆர். சண்முகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

## தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட

# 750 காவல் உதவி ஆய்வாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜன. 4 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.1.2026) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் காவல்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 621 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 129 தீயணைப்புத்துறை நிலைய அலுவலர்கள், என மொத்தம் 750 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

### காவல்துறை

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றிவரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள், காவலர் குடியிருப்புகள் கட்டுதல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு குடியிருப்புகள், பாதுகாப்பு பணிகளுக்காக ரோந்து வாகனங்களை கொள்முதல் செய்தல், காவல்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 621 காவல் உதவி ஆய்வாளர்கள் (ஆண் 469 மற்றும் பெண்152) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 14 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

### தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, தீயிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பதோடு, இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், நிலச்சரிவுகள் போன்றவைகளிலிருந்தும் மக்களை காப்பதும், அவசர உதவி புரிவதும் இத்துறையின் முக்கிய பணியாகும். இத்துறையின் செயல்திறனை மேம்படுத்திட புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் கட்டித் தருதல், பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தருதல், பல்வேறு நவீன கருவிகள் மற்றும் தீயணைப்பு ஊர்திகளை வழங்குதல் போன்ற பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 129 தீயணைப்புத்துறை நிலைய அலுவலர்கள் (ஆண்90 மற்றும் பெண் 39) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 6 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின்போது, முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகள் வழங்கிய 20 நபர்கள் போக, மீதமுள்ள காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் தீயணைப்புத் துறை நிலைய அலுவலர்களுக்கு தலைமைச் செயலாளர், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், காவல் துறை தலைமை இயக்குநர், காவல்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை உயர் அலுவலர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

சென்னை, ஊனமாஞ்சேரியில் உள்ள தமிழ்நாடு காவலர் உயர் பயிற்சியகத்தில் காவல் உதவி ஆய்வாளர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகள் வரும் 5.01.2026 முதல் தொடங்கப்பட உள்ளன. அதே போன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நிலைய அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் 21.01.2026 அன்று தொடங்கப்பட உள்ளன.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் காவல் உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கு 444 (ஆண் - 311 மற்றும் பெண் - 133) நபர்களும், இரண்டாம் நிலை காவலர் பணியிடங்களுக்கு 16,199 (ஆண் - 11,666 மற்றும் பெண் - 4,533) நபர்களும், தீயணைப்பாளர்கள் (Fireman) பணியிடங்களுக்கு 2001 நபர்களும், இரண்டாம் நிலை சிறைக் காவலர் பணியிடங்களுக்கு 366 நபர்களும், என மொத்தம் 19,010 நபர்கள் ஏற்கனவே பணி நியமனம் செய்யப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க. வெங்கடராமன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திருமதி. சீமா அகர்வால், காவல்துறை இயக்குநர்கள், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண் உள்ளிட்ட காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## வானிலை (அரசியல்) அறிக்கை!



2026 மே....

தி.மு.க..
தொடர்ந்து ஆட்சியில்...

அ.தி.மு.க.
அருங்
காட்சியில்

த.வெ.க...
சினிமா
காட்சியில்..

இது தான்
சூழலாக
இருக்கப் போகிறது..

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்